# இறைத்தூதன்

கத்தோலிக்க வார இதழ்


*அருள் கொடைகள் பலவகை உண்டு; ஆனால் தூய ஆவியார் ஒருவரே. திருத்தொண்டுகளும் பலவகை உண்டு; ஆனால் ஆண்டவர் ஒருவரே. செயல்பாடுகள் பலவகை உண்டு; ஆனால் கடவுள் ஒருவரே. அவரே எல்லாரிடமும் எல்லாவற்றையும் செயல்படுத்துபவர். பொது நன்மைக்காகவே தூய ஆவியாரின் செயல்பாடுகள் ஒவ்வொருவரிலும் வெளிப்படுகிறது. உடல் ஒன்றே; உறுப்புகள் பல. உடலின் உறுப்புகள் பலவாயினும் உடல் ஒன்றாயிருப்பதுபோல கிறிஸ்துவும் இருக்கிறார். ( 1 கொரி 12:1-7,12)*

# மத்திய கிழக்கில் நிலையான போர் நிறுத்தம் வேண்டும்




**வத்திக்கான்:** இஸ்ரயேலர்களுக்கும் பாலஸ் தீனியர்களுக்கும் இடையிலான வன்முறையை நிறுத்த வேண்டும் என்றும், ஆயுதங்களால் எல்லா நம்பிக்கைகளும் அழிக்கப்படுகின்றன என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

கடந்த மே 14 ஞாயிற்றுக்கிழமை வத்திக்கானின் புனித பேதுரு பேராயத்தின் வளாகத்தில் ஒன்று கூடிய மக்களுக்கு வழங்கிய அல்லேலுயா வாழ்த்தொலிக்குப் பின்பு இவ்வாறு கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நிலையான போர் நிறுத்தத்தை வலியுறுத்தி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உலகம் முழுவதும் அன்னையர் தினத்தைக் கொண்டாடி மகிழும் வேளையில் போரினால் ஏராளமான பெண்கள் துன்புறுவதை சுட்டிக்காட்டிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இஸ்ரயேலர்களுக்கும் பாலஸ்தீனியர்களுக்கும் இடையில் நடக்கும் ஆயுதம் ஏந்திய மோதல்களினால் பெண்கள் சிறார் உட்பட அப்பாவி மக்கள் ஏராளமானோர் உயிரிழந்துள்ளதையும் நினைவு கூர்ந்தார். ஆயுதங்களால் ஒருபோதும் பாதுகாப்பையும் நிலைத் தன்மையையும் அடைய முடியாது என்று வலியுறுத்திய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இத்தகைய போரினால் அமைதிக்கான எல்லா நம்பிக்கையும் தொடர்ந்து அழிக்கப்படும் நிலை உருவாகும் என்றும் எச்சரித்துள்ளார்.



மேலும் இரஷ்யா உக்ரைன் போரை நினவுகூர்ந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் உக்ரைனின் துன்பத்தைத் தணிக்கவும் போரினால் இறந்த அனைத்து அன்னையர்களின் ஆன்மா இறைவனின் நிறையமைதி பெறவும், போர்களாலும் வன்முறைகளாலும் காயமடைந்த அனைத்து நாடுகளின் துன்பத்தைப் போக்க வும் அன்னை மரியாவிடம் அர்ப்பணித்து செபிப்பதாகவும் எடுத்துரைத்தார்.

*மெரினா ராஜ் - வத்திக்கான்*

**மத்திய கிழக்கில் போர் நிறுத்தம் நிலையானதாக இருக்க வேண்டும், ஆயுதங்கள் வழியாக அமைதியைப் பெற முடியாது!**
(திருத்தந்தை பிரான்சிஸ்)

# மாமறைமாவட்டத்தின் கிறிஸ்தவ ஒன்றிப்பு மற்றும் அனைத்து சமய விவகாரங்களுக்கான பணிக்குழு கூடியது

கோலாலம்பூர்: கடந்த மே 6 ஆம் தேதி பெட்டாலிங் ஜெயாவில் உள்ள புனித பிரான்சிஸ் சேவியர் தேவாலயத்தில் கிறிஸ்தவ ஒன்றிப்பு மற்றும் அனைத்து சமய விவகாரங்களுக்கான கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் பணிக்குழு (AMEIA) கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான ஒரு நிகழ்வை நடத்தியது.
மேற்கண்ட கூட்டத்தில் கிறிஸ்தவ சபைகளின் தலைவர்கள் மற்றும் கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் பல்வேறு பங்குகளின் கிறிஸ்தவ ஒன்றிப்பு பணிக்குழு செயற்குழு உறுப்பினர்கள் (PMEIA) கலந்துகொண்டனர். உலக ளாவிய கிறிஸ்தவ ஒன்றிப்பின் கருப்பொருளான “நன்மை செய்; நீதியைத் தேடு ” (மீகா 6:8) என்பது இந்நிகழ்வுக்கும் கருப்பொருளாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

காலை நிகழ்வு இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. முதலாவது, கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான திருவழிபாடு மற்றும் கருப்பொருளின் அடிப்படையில் ஒரு கலந்துரையாடல். பாஸ்டர் சீன் பிரசாத் அவர்கள் ஒருங்கிணைப்பாளராகப் பொறுப் பேற்று நிகழ்ச்சியை வழிநடத்தினார்.

உரை நிகழ்த்தினவர்களின் விபரம் பின்வருமாறு:

1. பேராயர் ஜூலியன் லியாவ் (கத்தோலிக்கத் திருஅவை)
2. அருள்திருஆயர் ஸ்டீவன் லாரன்ஸ் (சீயோன் பேராலயம்)
3. அருள்திரு டாக்டர் விஜேந்திரன் டேனியல் (புனித பவுல் ஆங்கிலிகன் திருஅவை)
4. அருள்திரு கே.எஸ். மெத்யூ (மார்தோமா, சிரியன் திருஅவை)

ஒவ்வொரு பேச்சாளரும் பொருளாதாரம், சமூகம், சுற்றுச்சூழல் & நிர்வாகம் போன்ற கருப்பொருளின் வெவ்வேறு அம்சங்களைப் பற்றி பேசினார்கள். வழங்கப்பட்ட தலைப்புகளில் பங்கேற்பாளர்கள் மற்றும் பேச்சாளர்களிடையே ஒரு பயன்மிகு கருத்துப்பரிமாற்றம் நடைபெற்றது.

குழு புகைப்படம் மற்றும் மதிய உணவுக்காகப் பிரிந்து செல்வதற்கு முன் அனைத்து சபைத் தலைவர்களும் கூட்டாக பங்கேற்பாளர்களை ஆசீர்வதித்தனர்.



கிறிஸ்தவ ஒன்றிப்பு (சந்திப்பு) பேரவையில் கலந்துகொண்டோர்

*தொடர்ச்சி அடுத்துப் பக்கம்..*

# அருட்சகோதரர் ஞானசெல்வம் பெரன்திஸ் அவர்களின் திருத்தொண்டர் அருள்பொழிவு கொண்டாட்டம்

எதிர்வரும் ஜூன் மாதம் 5-ஆம் திகதி, திங்கட்கிழமை, காலை 10.00 மணிக்கு, புக்கிட் நானாஸ் கான்வென்ட் சிற்றாலயத்தில் அருட்சகோதர் ஞானசெல்வம் அவர்களின் திருத்தொண்டர் அருள்பொழிவு கொண்டாடப்படவுள்ளது. இவர் சிலாங்கூர், பெஸ்தாரி ஜெயாவிலுள்ள புனித வனத்து சின்னப்பர் பங்கைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அருட்சகோதரர் ஞானசெல்வம் தமது முதலாம் ஆண்டு திருஅவையொட்டிய அடிப்படை திருஅவை கல்வியை பினாங்கு குருத்துவக் கல்லூரியிலும் (2016-2017) பின்னர் இறையியல் தொடர்பான கல்வியை சரவாக், கூச்சிங் புனித பேதுரு கல்லூரியிலும் (2018-2022) வரை வெற்றிகரமாக முடித்தார்.

இப்போது, புக்கிட் நானாசில் உள்ள புனித ஜோன் பேராலத்தில் தங்கியிள்ளார். அவரது திருத்தொண்டர் அருள்பொழிவு கொண்டாட்டத்தில் இடப்பற்றாக் குறையைக் கருத்தில் கொண்டு அழைக்கப்பட்டோர் மட்டுமே கலந்து கொள்ள இயலும். இவரது திருத்தொண்டர் அருள்பொழிவுக்கும் அடுத்து வரும் குருத்துவ அருள்போழிவுக்கும் அனைவரும் இறைவனை இறைஞ்சி மன்றாடுவோம்.

*முதல் பக்கத் தொடர்ச்சி.*

"ஒவ்வொரு ஆண்டும் AMEIA அனைத்து சமயங்களையும் சேர்ந்த மலேசியர்களிடையே நல்லுறவு, நல்லிணக்கம் மற்றும் சகோதரத்துவத்தையும் கட்டியெழுப்புவதற்கான அதன் அர்ப்பணிப்புடன் இந்த கிறிஸ்தவ ஒன்றிப்பு மற்றும் சமயங்களுக்கிடையாலான உரையாடல் பணிக்குழு இத்தகைய ஒன்றுகூடல் நிகழ்வை நடத்துகிறது," என்று ஆலோசகர் அருள்தந்தை சேவியர் ஆண்ட்ரூ கூறினார்.

*ஏஞ்சலின் லெஸ்லரால் (அமைப்புத் தலைவர்)*



**"என் பெயரால் தந்தை அனுப்பப்போகிற தூய ஆவியாம் துணையாளர் உங்களுக்கு அனைத்தையும் கற்றுத் தருவார்; நான் கூறிய அனைத்தையும் உங்களுக்கு நினைவூட்டுவார்" (யோவான் 14:26)**




# பாரிட் புந்தார், புனித ஆரோக்கிய அன்னை பங்கில் அன்னையர் தினக்கொண்டாட்டம்

**பாரிட் புந்தார்:** மே 14, 2023, ஞாயிற்றுக் கிழமை, புனித ஆரோக்கிய அன்னை, பாரிட் புந்தார் பங்கில், உலகில் உள்ள அனைத்து தாய்மார்களும் செய்த அனைத்து தியாகங்களையும் நினைவுகூரும் இந்த அற்புதமான மற்றும் அர்த்தமுள்ள நாளைக் கொண்டாடும் வாய்ப்பைப் பெற்றது. இந்நிகழ்ச்சியில், பங்குத்தந்தை மார்ட்டின் அருளாந்து அவர்களும், புக்கிட் மெர்தாஜாமின் புனித அன்னம்மாள் மைனர் பசிலிக்காவிலிருந்து வருகை தந்தை அருள்தந்தை ரேமண்ட் ராஜ் ஜெரேமியா அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

திருப்பலியில், மறையுரையின் போது



"அன்பு" பற்றி அறிவுறுத்தியது அனைத்து பங்கு மக்களையும் கவர்ந்தது. கிறிஸ்தவ வாழ்க்கையின் வளர்ச்சிக்காக அனைவரும் ஒருவரோடொருவர் காட்ட வேண்டிய அன்பு இன்றியமையாதது என்று அருள்தந்தை ரேமண்ட் ராஜ் ஜெரேமியா கூறினார். மேலும் இந்த அன்பு அன்னையர் தின கொண்டாட்டத்தில் சிறப்புப் பெறுகிறது என்றுரைத்தார்.

இப்பங்கின் இறைமக்கள் அந்தந்த அடிப்படை திருஅவை சமூகங்களில்



(BEC) அன்னையர் தினத்தையொட்டி சில நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். ஒவ்வொரு அ.தி.ச.வும் பிற அ.தி. சமூகங்களோடு இணைந்து விளையாட்டுகள், பாடல்கள் போன்ற போட்டி நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டன.

இந்நிகழ்வு அன்னையர் தின அணிச்சல் வெட்டியதோடு, அருள்தந்தையர்களின் ஆசீர்வாதத்தோடு இனிதே முடிவுற்றது.

# மணிப்பூரில் அமைதி நிலவ இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவை வேண்டுகோள்



இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான மணிப்பூரில் மதவெறிக் கலவரங்களால் ஏறக்குறைய 60 பேர் உயிரிழந்தும், 35,000 பேர் வீடிழந்தும் உள்ள நிலையில் நாட்டில் அமைதி நிலவுமாறு இந்தியக் கத்தோலிக்க ஆயர்கள் பேரவை (C B C I) அதன் அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளது. இந்தியாவின் அனைத்து குடிமக்களின் வருத்தத்தையும் அக்கறையையும் இவ்வன்முறை பெற்றுள்ளது என்றும், விலைமதிப்பற்ற உயிர்கள் அழிக்கப்பட்டும், வீடுகள் எரிக்கப்பட்டும், உடைமைகள் சேதப்படுத்தப்பட்டும் வழிபாட்டுத் தலங்கள் இழிவுபடுத்தப்பட்டும் இருப்பது மிகுந்த வேதனையளிக்கின்றது என்று கூறியுள்ளார் CBCI தலைவரும் திருச்சூர் உயர் மறைமாவட்ட பேராயருமான ஆண்ட்ரூஸ் தாழத்.

# பிளவுண்ட நாவுகள் பிளவுண்ட திருஅவையை இணைப்பதாக!

இன்றைய நற்செய்தியில் இயேசு, மீண்டும் திருத்தூதர்களை நோக்கி, 'உங்களுக்கு அமைதி உண்டாகுக! தந்தை என்னை அனுப்பியது போல நானும் உங்களை அனுப்புகிறேன்" என்றார். இதைச் சொன்ன பின் அவர் அவர்கள்மேல் ஊதி "தூய ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்" என்கிறார். ஆம், அவர்களைத் திடப்படுத்தி, ஊக்கம் அளித்து, தெம்புடன் அவர்கள் பணியைத் தொடர துணையாளரை அனுப்புகிறார்.

"துணையாளர்" என இயேசு குறிப்பிடும் சொல்லுக்கு இரு பொருள்கள் உண்டு. எபிரேய மரபில் இதற்குத் "தேற்றுகிறவர்", "ஆறுதல் அளிப்பவர்" என்பது பொருள் மற்றொன்று, "பரிந்துபேசுபவர்", "சார்பாக வாதாடுபவர்", அருகிருந்து "உதவி செய்பவர்" என்றும் பொருள்படும்.

துன்பங்களைத் தாண்டி இறைபணியாற்ற துணிச்சலைத் தருபவர் தூய ஆவியார். அன்பு, பரிவு, இரக்கம், நேர்மை, உண்மை ஆகிய பண்புகளைத் தந்து நம்மை திடன் கொள்ளச் செய்பவரும் தூய ஆவியார். அந்தத் தூய ஆவியாரின் பெருவிழாவை இன்று கொண்டாடுகின்றோம்.

பெந்தகோஸ்து அன்று, அடைபட்டுக் கிடந்தச் சீடர்களைத் தேற்றி போதிக்கும் வல்லமையைக் கொடுத்தது தூய ஆவியர் என்பதை இன்றைய முதல் வாசகம் எடுத்துரைக்கிறது. மூவொரு இறைக் குடும்பத்தில் மூன்றாம் ஆளாகப் போற்றப்படுகிறார் தூய ஆவியார்.

தூய ஆவியைப் பெற்ற திருத்தூதர்களும் சீடர்களும் அயல் மொழிகளில் பேசி அனைவரின் கவனத்தையும் கவர்ந்ததாக நாம் வாசிக்கிறோம். அயல் மொழிகளில் பேசியது ஆவியின் ஆற்றலுக்கு ஓர் அடையாளமே. இறையரசு உலகமெங்கும் பரவ இருக்கிறது, நற்செய்தி நான்கு திசைகளையும் எட்டும். பல இனங்கள், பல மொழிகள் பேசும் மக்கள், பலவிதமான கலாச்சாரங்களால் அனைவருமே இறையரசில் ஒன்றிருத்திருப்பர். இயேசு கிறிஸ்து என்ற ஒரே மீட்பரின் கீழ் செயல்படுவார்கள் என்பதற்கு ஓர் அடையாளமே அயல் மொழிகளில் பேசி அனைவரும் புரிந்து கொள்ளும் செயல் என கண்டோம்.

இரண்டாம் வாசகத்திலே, பிளவுபட்டிருந்த கொரிந்து திருஅவையை 12:12 இல் திருஅவையில் ஒற்றுமை பற்றியும் கூறி, பொது நன்மைக்காகவே தூய ஆவியாரின் செயல்பாடுகள் ஒவ்வொருவரிலும் வெளிப்படுகிறது என்பது தெளிவுப்படுத்தப்படுகிறது "உடல் ஒன்றே, உறுப்புக்கள் பல; உடல் உறுப்புக்கள் பலவாயினும் உடலாய் ஒன்றாயிருப்பதுபோல கிறிஸ்துவில் நாம் பலராயினும் ஒன்றாய் இருக்கிறோம்.

திருமுழுக்கு வழியாக தூய ஆவியைப் பெற்ற நாம், மக்கள் நலப் பணியை சமூக நலக்காரியங்களில் எடுத்துச் செல்லும் போது எதிர்கொள்ளும் போது இடையூறுகளையும், துன்பங்களையும் தாங்கும் சக்தியைப் பெற்று புதுத்தெம்பும் பெற்றிடுவோம்.

*ஆ.வி.டேவிட். குளுவாங்.*

**தூய ஆவியார் பெருவிழா**

| | |
|---|---|
| 1-ம் வாசகம் | திப 2: 1-11 |
| தி.பா | 104:1ab,24ac.29bc-30.31,34 |
| 2 வாசகம் | 1 கொரி 12: 3b-7, 12-13 |
| நற்செய்தி | யோவான் 20: 19-23 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 1**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**
**திருப்புகழ் மாலை- தூய ஆவியார் பெருவிழா**